## கொடைக்கானல் நகராட்சி

2018ம் ஆண்டு ஜுன் மாதம் 25ம் நாள் (25.06.2018) திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றக் கூடத்தில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

முன்னிலை: ரா.முருகேசன், எம்.ஏ., எம்.பில்., பி.எல்., டி.பி.எம்.,
தனி அலுவலர்.

### மன்றப் பொருள்

1) கொடைக்கானல் நகராட்சியில் நடைபெற்ற கோடைவிழா–2018 மற்றும் மலர்கண்காட்சியினை துவக்கி வைக்க வருகைபுரிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் மற்றும் அரசு அதிகாரிகளை வரவேற்கும் விதமாக செய்தித்தாளிழ் விளம்பரம் வெளியிட்ட வகையில் கீழ்கண்ட விபரப்படி தொகை வழங்கக் கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. பட்டியல்படி தொகையினை வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | நாளிதழ் பெயர் | பட்டியல் எண் மற்றும் நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | MaduraiMani | 15383, நாள்.20.05.2018 | ரூ.28,500/– |
| 2 | Malai Murasu | ADB0408, நாள்.19.05.2018 | ரூ.30,000/– |
| 3 | The Daily Thanthi | DGL1819-0001909, நாள்.19.05.2018. | ரூ.36,832/– |
| 4 | Express Publications (Madurai) Limited, Thinamani. | MDUTN30049644,நாள்.19.05.2018. | ரூ.40,000/– |
| 5 | Leo Santiago Advertisers (The Hindu) | 63/18-19, நாள்.19.05.2018. | ரூ.16,800/– |
| | | மொத்தம் | ரூ.1,52,132/– |

அலுவலக குறிப்பு – அனுமதி அளிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **406, நாள். 25.06.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

2) கொடைக்கானல் நகராட்சிக்குட்பட்ட, வார்டு 8, ஆனந்தகிரி 4வது தெரு பகுதியில் அமைந்துள்ள நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடைபாதை மேடையில் விரிசல் உள்ளதாகவும், மழைகாலங்களில் நீர் தேங்கி வடிவதனால் பல கோப்புகள் சேதமாகும் நிலையில் உள்ளதாகவும், சுவர்கள் முழுவதும் பூஞ்சைகள் வளர்ந்துள்ளதால் வெள்ளையடித்து தருமாறு துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், பழனி அலுவலக ந.க.எண்.500/அ6/2018, நாள்.11.04.2018ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட இடம் நேராய்வு செய்யப்பட்டது. மேற்படி இடத்தில் மராமத்துப் பணிகள் மேற்கொள்ள ரூ.1,50,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீட்டிற்கும் செலவினத் தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2) மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **407, நாள். 25.06.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

3) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான LED தெருவிளக்குகளை தனியார் மூலம் இயக்கி பராமரித்திடும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில அளவிலான செய்தித்தாளில் வெளியிட்ட வகையில் தொகை ரூ.56,448/– வழங்கக் கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. பட்டியல்படி தொகையினை வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நாளிதழ் பெயர் | பட்டியல் எண் மற்றும் நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | Accord Advertising Agencies | AAA/1285/17-18, நாள்.28.03.2018 | ரூ.56,448/– |

அலுவலக குறிப்பு – அனுமதி அளிக்கலாம்.

| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 408, நாள். 25.06.2018. |
|---|---|
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | அனுமதிக்கப்படுகிறது. |

*******

4) கொடைக்கானல் நகராட்சிக்கு திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.2634/2018/ஊ.வ.8, நாள்.07.06.2018ன்படி சுங்க நிதியின் கீழ், கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்ச த்தில்) |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1 | நகராட்சி எல்லைக்குட்பட்ட கோகினூர் பங்களா முதல் சிவனடி சாலை வரை, கால்டன் ஹோட்டல் சாலை மற்றும் சியோன் பள்ளி முதல் கோடை இன்டர்நேசனல்ஹோட்டல் வரை சாலைகளை சீரமைக்கும் (Patch Work) பணி. | 9.80 |
| 2 | கோடைவிழா நடைபெறும் பிரையண்ட் பார்க் முன்புறம் உள்ள சாலையில் பேவர் பிளாக் தளம் அமைத்தல். | 9.20 |
| 3 | கோடை இன்டர்நேசனல் ஹோட்டல் ரோடு முதல் சிவனடி ரோடு வரை மற்றும் கவி தியாகராஜர் சாலை சீரமைக்கும் (Patch Work) பணி. | 9.10 |

மேற்கண்ட பணிகளுக்கு சுங்க நிதியின் கீழ் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் பதிவு செய்யலாம்.

| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 409, நாள். 25.06.2018. |
|---|---|
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | பதிவு செய்யப்படுகிறது. |

*******

5) கொடைக்கானல் நகராட்சிக்கு நவீன எரிவாயு தகன மேடை அமைக்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில அளவிலான செய்தித்தாளில் வெளியிட்ட வகையில் தொகை ரூ.86,940/– வழங்கக் கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. பட்டியல்படி தொகையினை பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நாளிதழ் பெயர் | பட்டியல் எண் மற்றும் நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | Accord Advertising Agencies | AAA/1233/17-18, நாள்.16.03.2018 | ரூ.86,940/– |

அலுவலக குறிப்பு – அனுமதி அளிக்கலாம்.(ந.க.எண்.2136/2017/இ1)

| | |
|---|---|
| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 410, நாள். 25.06.2018. |
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | அனுமதிக்கப்படுகிறது. |

*******

6) கொடைக்கானல் நகராட்சிக்கு துப்புரவுப் பணியாளர் குடியிருப்பு அமைக்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில அளவிலான செய்தித்தாளில் வெளியிட்ட வகையில் தொகை ரூ.1,24,790/– வழங்கக் கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. பட்டியல்படி தொகையினை பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நாளிதழ் பெயர் | பட்டியல் எண் மற்றும் நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | Accord Advertising Agencies | AAA/1232/17-18, நாள்.16.03.2018 | ரூ.1,24,790/– |

அலுவலக குறிப்பு – அனுமதி அளிக்கலாம்.

| | |
|---|---|
| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 411, நாள். 25.06.2018. |
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | அனுமதிக்கப்படுகிறது. |

*******

7) கொடைக்கானல் நகராட்சி 2018–19ம் ஆண்டிற்கு எழுது பொருட்கள் கொள்முதல் செய்து அலுவலக இருப்பில் வைக்கப்பட வேண்டியுள்ளது. எழுது பொருட்களின் தேவை பட்டியலில் காணும் விபரத்திற்கு உரிய எழுது பொருட்களை அரசாணை நிலை எண்.330, தொழில்துறை நாள்.03.05.1991ன்படி விலைப்புள்ளி மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோராமல் நேரடியாக மாவட்ட அச்சக சேவைத் தொழிற் கூட்டுறவு சங்கம் லிட் நிறுவனங்களில் கொள்முதல் செய்து கொள்ள அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேலும், சென்னை நகராட்சி நிர்வாக இணை ஆணையர் (நிர்வாகம்) அவர்களின் கடிதம் C.No.29968/2012/OP3, நாள்.30.12.2013ன்படி நகராட்சிக்கு தேவையான அனைத்துவிதமான

பொருட்களையும் அரசு கூட்டுறவு நிறுவனங்களில் கொள்முதல் செய்து கொள்ள பரிந்துரை செய்துள்ளார்கள்.

மேற்காணும் அனுமதிககிணங்க 2018—19ம் ஆண்டிற்கு தேவையான எழுது பொருட்களை கோயம்புத்தூர் மாவட்ட அச்சக சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிட் நிறுவனத்திலிருந்து கொள்முதல் செய்து கொள்வதற்கும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.10,00,000/—ஐ (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அரசாணை நிலை எண்.330, தொழில்துறை, நாள்.03.05.1991ன்படி விலைப்புள்ளி மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோராமல் அரசு கூட்டுறவு நிறுவனமான கோயம்புத்தூர் மாவட்ட அச்சக சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிட் நிறுவனத்திடமிருந்து இந்நகராட்சிக்கு 2018—19ம் ஆண்டிற்கு தேவையான எழுது பொருட்களை கொள்முதல் செய்வதற்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூபாய் பத்து லட்சத்தினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1998/2018/பி3)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **412, நாள். 25.06.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

ஒம்/—ரா.முருகேசன்,
தனி அலுவலர்,
கொடைக்கானல் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.

<u>கொடைக்கானல் நகராட்சி</u>

2018ம் ஆண்டு ஜுன் மாதம் 28ம் நாள் (28.06.2018) வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றக் கூடத்தில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் அவசரக் கூட்டம்.

முன்னிலை: ரா.முருகேசன், எம்.ஏ., எம்.பில்., பி.எல்., டி.பி.எம்.,
தனி அலுவலர்.

<u>மன்றப் பொருள்</u>

1) கொடைக்கானல் நகராட்சிக்கு வருவாய்நிதி 2018–19ன் கீழ் பணி மேற்கொள்வதற்கு 22.06.2018ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு அட்டவணை மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரரின் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட பொது சுகாதாரப் பிரிவில் உள்ள 29 எண்ணம் டம்பர் பிளேசர் பின்களை பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ளதல். | 9.90 | M/S. S.R.Enterprises Chennai-19<br><br>M/s.Rajeswari L Nathan chamicals & traders. Chennai-11 | மதிப்பீட்டு விகிதம்<br><br>1.67% அதிகம் |

அலுவலக குறிப்பு. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/S. S.R.Enterprises, Chennai-19 ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **413, நாள். 28.06.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **ஏற்கப்படுகிறது.** |

*******

2) கொடைக்கானல் நகராட்சிக்கு வருவாய்நிதி 2018–19ன் கீழ் பணி மேற்கொள்வதற்கு 22.06.2018ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு அட்டவணை மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரரின் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | பொது சுகாதாரப் பிரிவிற்கு 10 எண்ணம் புதிய டம்பர் பிளேசர் பின்கள் விநியோகம் செய்தல். | 8.75 | M/S. S.R.Enterprises Chennai-19<br><br>M/s.Rajeswari L Nathan chamicals & traders. Chennai-11 | மதிப்பீட்டு விகிதம்<br><br>1.67% அதிகம் |

அலுவலக குறிப்பு. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/S. S.R.Enterprises, Chennai-19 ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **414, நாள். 28.06.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **ஏற்கப்படுகிறது.** |

*******

3) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான ஜிம்கான கிணற்றுக்கு அருகிலுள்ள 4 எண்ணம் ஆழ்துளை கிணறுகள் மற்றும் நகராட்சி அலுவலகம் அருகிலுள்ள 2 எண்ணம் ஆழ்துளை கிணறுகள் ஆகியவற்றின் மின் மோட்டார் இயக்கமுடியாத நிலையில் பழுதடைந்துள்ளது. இதனால் ஜிம்கானா கிணற்றிலிருந்து குடிநீர் விநியோகம் மற்றும் நகராட்சி அலுவலகத்தில் அருகிலுள்ள பொதுக்கழிப்பறைக்கு தண்ணீர் வசதி போதுமானதாக இல்லாத நிலையிலுள்ளது. எனவே, மேற்கண்ட 6 எண்ணம் ஆழ்துளை கிணறுகளின் மின் மோட்டார்களை பழுது நீக்கம் செய்திட ரூ.5.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு அனுமதியும் மேற்கண்ட தொகையினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி அளிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **415, நாள். 28.06.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

4) கொடைக்கானல் நகராட்சிக்குட்பட்ட இருதயபுரம் பகுதியில் ஏற்கனவே உள்ள நகராட்சி குடிநீர் தொட்டி குடியிருப்பு பகுதியில் இருந்து உயரமான இடத்தில் அமைந்துள்ளதால், மழைக்காலங்களில் மேற்சொன்ன இடத்திலிருந்து குடிநீர் பெறுவது சிரமம் இருப்பதால், குடியிருப்புகள் அமைந்துள்ள பகுதியிலேயே குழாய் அமைத்து கொடுக்க அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்சொன்ன இருதயபுரம் பகுதி மக்களின் கோரிக்கையின் அடிப்படையில், இடம் நேராய்வு செய்யப்பட்டது. அப்பகுதி மக்களின் கோரிக்கை நியாயமாக உள்ளதால் குடியிருப்பு பகுதிக்கு அருகில் குழாய் அமைக்க ரூ.3,35,000/– செலவில் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

மேற்சொன்ன மதிப்பீட்டிற்கும், செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி அளிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **416, நாள். 28.06.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

******

5) கொடைக்கானல் நகராட்சி இருபால் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தேவையான கழிப்பிட வசதி நகராட்சி வளாகத்திற்குள் ஏற்படுத்தவும், அதே போல் நகராட்சி குடிநீர் 24 மணி நேரமும் கிடைக்கும் வகையில் வசதிகளை ஏற்படுத்த கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து அதிலிருந்து மேல்நிலைத் தொட்டிக்கு நீரேற்றத் தேவையான மோட்டார் உள்ளிட்ட உபகரணங்கள் கொள்முதல் செய்து பொருத்தவும், அலுவலக பணியாளர்கள் ஓரிடத்தில் மேலாளரின் பார்வையில் அமர்ந்து பணி செய்யும் வகையில் இருக்கைகளை மாற்றியமைக்கவும், அதற்கான மேஜை நாற்காலிகள் கொள்முதல் செய்யவும் தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.10,00,000_ க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிகலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **417, நாள். 28.06.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

6) கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றத் தீர்மானம் எண்.218, நாள்.28.09.2017ல் குடிநீர் கட்டண வைப்புத் தொகை மற்றும் கட்டண விகிதங்களை திருத்தியமைக்க அங்கீகரிக்கப்பட்டதன் அடிப்படையில் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளர் அவர்களின் கடிதம் ந.க.எண்.9227/2016/குவ2, நாள்.30.05.2018ல் அனுமதிக்கப்பட்ட கீழ்க்கண்ட விபரப்படியான குடிநீர் கட்டண திருத்த விகிதம் மன்றத்தின் பதிவிற்க்கு வைக்கப்படுகிறது. நாளிதழில் விளம்பரம் செய்யவும், திண்டுக்கல் மாவட்ட அரசிதழ் அறிவிக்கை செய்யவும் அதற்கான செலவு தொகையை குடிநீர்நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| உபயோகம் | முன் வைப்பு தொகை | தற்போதுள்ள கட்டண விகிதம் | முன் வைப்பு தொகை | உயர்த்தப்பட்டுள்ள கட்டண விகிதம் |
|---|---|---|---|---|
| வீட்டு உபயோகம் | 3,500 | 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் ரூ.3/– வீதம் குறைந்த பட்ச மாதக் கட்டணம் ரூ.30/– பராமரிப்புக் கட்டணம் ரூ.5/– ஆக குறைந்த பட்சக் கட்டணம் ரூ.35/– | 7,000 | 10000 லிட்டர் வரை கட்டணம் ரூ.120/– 10000 லிட்டருக்கு மேல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் ரூ.15/– பராமரிப்புக் கட்டணம் ரூ.20/– ஆகவும் குறைந்த பட்சக் கட்டணம் ரூ.140/– |
| வீட்டு உபயோகம் அல்லாத இணைப்பு களுக்கு | 12,000 | 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் ரூ.15/– வீதம் குறைந்த பட்ச மாதக் கட்டணம் ரூ.150/– பராமரிப்புக் கட்டணம் ரூ.10/– ஆக குறைந்த பட்சக் கட்டணம் ரூ.160/– | 16,000 | 10000 லிட்டர் வரை கட்டணம் ரூ.350/– 10000 லிட்டருக்கு மேல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் ரூ.30/– பராமரிப்புக் கட்டணம் ரூ.40/– ஆகவும் குறைந்த பட்சக் கட்டணம் ரூ.390/– |
| தொழிற்சாலை பயன்பாடு இணைப்பு களுக்கு | –– | –– | 20,000 | 10000 லிட்டர் வரை கட்டணம் ரூ.500/– 10000 லிட்டருக்கு மேல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் ரூ.50/– பராமரிப்புக் கட்டணம் ரூ.50/– ஆகவும் குறைந்த பட்சக் கட்டணம் ரூ.550/– |

அலுவலக குறிப்பு –1) மன்றம் பதிவு செய்யலாம்.
2) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **418, நாள். 28.06.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

ஒம்/–ரா.முருகேசன்,
தனி அலுவலர்,
கொடைக்கானல் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.